# 3 பாரதியார் - சுயசரிதை

இருபதாம் நூற்றாண்டுக்குரிய கவிஞர்களுள் பாரதியார் அவர்கள் மிகப் பிரபல்யம் வாய்ந்தவர். அவரது கவிதைகளில் கையாளப்பட்டுள்ள எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு என்பன போன்ற சிறப்பம்சங்கள் இலக்கிய உலகில் பாரதிக்கு தனிச்சிறப்பை பெற்றுக்கொடுத்தது எனலாம்.

இவரது கவிதைகள் பாமாலை, தேசிய கீதங்கள், பல்சுவைப் பாடல்கள், காவியங்கள், தனிப்பாடல்கள் எனப் பல பிரிவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பாரதியின் பல்சுவைப்பாடல்கள் என்ற பிரிவில் **சுயசரிதை** எனும் பகுதியில் 'பிள்ளைக் காதல்' எனும் தலைப்பின் கீழ் உள்ள ஒரு சில கவிதைகளை நாம் இங்கு எடுத்து நோக்குவோம் *(9-13)*



நீரெ டுத்து வருதற் கவள்மணி
　　நித்தி லப்புன் னகைசுடர் வீசிடப்
போரெ டுத்து வருமதன் முன்செலப்
　　போகும் வேளை யதற்குத் தினந்தொறும்
வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
　　வீந்திடச் செய்தல் வேண்டிய மன்னர் தம்
சீரெ டுத்த புலையியற் சாரர் கள்
　　தேச பக்தர் வரவினைக் காத்தர் போல். 09

காத்தி ருந்தவள் போம்வழி முற்றிலும்
　　கண்கள் பின்னழ கார் ந்து களித்திட
யாத்த தேருரு ளைப்படு மேழைதான்
　　யாண்டு தேர் செலு மாங்கிழுப் புற்றெனக்
கோத்த சிந்தனையோ டேகி யதில்மகிழ்
　　கொண்டு நாட்கள் பலகழித் திட்டனன்
பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்
　　புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன். 10

புலங்க ளோடு கரணமும் ஆவியும்
　　போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்க ளேது விரும்புவன் அங்கவை
　　நண்ணு றப்பெறல் திண்ணம தாமென,
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
　　யானும் மற்றது மெய்யெனத் தேர் ந்துளேன்;
விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்
　　விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே. 11

சூழு மாய வுலகினிற் காணுறுந்
　　தோற்றம் யாவையும் மானத மாகூமால்;
ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்,
　　அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்,
தாழு முள்ளத்தர்,சோர் வினர், ஆடுபோல்
　　தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்,
வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்,
　　விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே. 12

விதியை நோவர் ,தம் நண்பரைத் தூற்றுவர் .
    வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர் ,
சதிகள் செய்வர், பொய்ச்சாத்திரம் பேசுவர்,
    சாதகங்கள் புரட்டுவர் பொய்மைசேர்
மதியி னிற்புலை நாத்திகங் கூறுவர்,
    மாய்ந்தி டாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென லோர் ந்திடார்.
    கண்ணி லாதவர் போலத் திகைப்பர் காண். 13

◆ அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| நித்திலம் | - முத்து | சுடர் | - ஒளி |
| ஜோதி | - பிரகாசம் | வதனம் | - முகம் |
| கரணம் | - மனம் | ஆவி | - உயிர் |
| நண்ணுதல் | - அடைதல் | மாய உலகு | - நிலையற்ற உலகு |
| இடையூறு | - துன்பம் | வெகுளி | - கோபம் |
| கதிகள் | - வீடுபேறு | | |

## வினாக்கள்

1. இலக்கிய உலகில் பாரதிக்கு தனிச் சிறப்பை பெற்றுக் கொடுத்தவை எவை?

2. ஒருவர் தாம் விரும்பும் நலன்களை அடைவதற்கு எவ்வாறு முயற்சிக்க வேண்டும் என பாரதி இங்கு கூறியுள்ளார்?

3. ஒருவர் தாம் விரும்பியவற்றை அடைய இயலாமல் போவதற்கான காரணங்களாக எத்தகைய பண்புகளை பாரதி குறிப்பிடுகின்றார்?

4. இப்பாடல் பகுதியில் வந்துள்ள இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

5. இவ்வடிகளின் பொருளை எழுதுக:
    ஆழு நெஞ்சத் தாசையின் றுளதேல்
    அதனுடைப் பொருள் நாளை விளைந்திடும்

6. எனக்குப் பிடித்த பாரதி பாடல் எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

## குழுச் செயற்பாடு

மாணவர்களை குழுக்களாகப் பிரித்து பாரதியின் ஏனைய பாடல்களாகிய பாப்பாப் பாட்டு, கண்ணன் பாட்டு போன்ற பாடப் பகுதிகளில் இருந்து சில பாடல்களை திரட்டி சிறு தொகுப்பாக்குமாறு ஊக்கப்படுத்துக.